**கண்காணிப்புப்பொறியாளர், பொபது கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள்**

-----

பிறப்பிப்பவர். பொறிஞர்.பெ.தேவி, பி.இ.,
கண்காணிப்புப்பொறியாளர், பொபது.,

செயல்முறை ஆணை எண்: 808 (75 )/நிஎ2/2023/நாள்.09.01.2023

பொருள்: பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி - காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.க.சரவணன், கண்காணிப்பாளரின் மகன் திரு.ச.சஞ்சய் ஹரிஹரன் என்வருக்கு கருணை அடிப்படையில் "இளநிலை உதவியாளர்" பதவியில் பணிநியமனம் வழங்கியது பணியமர்வாணை வழங்கப்பட்டது - மறுபணியமர்வாணை வழங்கல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்:18/தொ(ம) வே.க்யூ-1, நாள்:23.01.2020.
2. முதன்மை தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண்:எஸ்.3(3)/036241/2022/நாள்:26.12.2022.
3. தலைமைப்பொறியாளர், பொபது., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/1052/ 2022(10)/ நாள்:05.01.203

*****

பார்வை (2) மற்றும் (3)ல் காணும் ஆணைகளின்படி, பணிப்பெயர்ச்சிக்கு முன்பான கட்டட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) மருத்துவப்பணிகள், உபகோட்டம், பெரம்பலூர் (பணிப்பெயர்ச்சிக்கு பின் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம், குன்னம்) அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த போது 20.04.2019-அன்று மரணமடைந்த அரசு ஊழியர் திரு.க.சரவணன், கண்காணிப்பாளரின் மகன் செல்வன்.ச.சஞ்சய்ஹரிஹரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம்-2016 (தமிழ்நாடு சட்டம்-2016)-இல் உள்ள பிரிவில் 17(1)-ன் தமிழ்நாடு திருத்திய ஊதிய விதி 2017-ன்படி நிலை-8 ரூ.19500-71900/- ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்டு, இவ்வட்ட அலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து தனியருக்கு மேற்காணும் பணியிடத்திற்கு மறு பணியமர்வாணை வழங்கப்படுகிறது.

திரு.ச.சஞ்சய் ஹரிஹரன் என்பவருக்கு வழங்கப்படும் இளநிலை உதவியாளர் பணிநியமனம் தற்காலிகமானது என்றும், எந்த நாளிலும் முன்னறிவிப்பும் காரணமுமின்றி அவர் பணிநீக்கம் செய்யப்படலாம் எனவும் தனியருக்கு தெரிவிக்கப்படுகிறது. அவரின் பணிநியமனம் அரசின் ஆணை பெற்ற பின்னர் தான் வரன்முறைப்படுத்தப்படும் எனவும் தனியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

த.தி.பா/-

மேலும், இவர் இந்த பணிநியமனத்திற்காக அவரின் குடும்பநிலை, வருமானம், கல்வித்தகுதி மற்றும் பிற விவரங்கள் அளிக்கப்பட்டதில் ஏதும் தவறானது என்று தெரியவந்தால் விதிகளின்படி அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பணிநீக்கம் செய்யப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்பணியாளர் பணியில் சேர்ந்தவுடன் 01.04.2003 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் (Contribution Pension Scheme) கீழ் கொண்டு வரப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பணியில் சேரும்போது அங்கீகாரம் பெற்ற மருத்துவ அலுவலரிடமிருந்து உடல் தகுதிச்சான்றிதழ் (Physical Fitness Certificate) பெற்று சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறது.

கண்காணிப்புப்பொறியாளர், பொபது,
கட்டட (க&ப) வட்டம், தஞ்சாவூர்.

பெறுநர்
திரு.ச.சஞ்சய் ஹரிஹரன்,
த/பெ.(லேட்).திரு.க.சரவணன்,
பிளாட் எண்.456, வாசன் நகர் முதல் கிராஸ்,
இரட்டை வாய்க்கால்,
வயலூர் ரோடு, நாச்சிக்குறிச்சி,
ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சி - 620 102.

நகல்: தலைமைப்பொறியாளர், பொபது., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: முதன்மை தலைமைப்பொறியாளர், தலைமைப்பொறியாளர் (பொது) பொபது சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

கண்காணிப்புப்பொறியாளர் பொபது,
கட்டட (க&ப) வட்டம், தஞ்சாவூர்.